---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறானகூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை கருத்திற் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களைஉள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவாஎன்பதனைமதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| **உரிய நியமம் தொடர்பாக இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தி பிரகாரம், ஒரு சொத்து வகைக்குரிய அனைத்து சொத்துக்களையும் ஒரே நேரத்தில் மீள்திப்பீடு செய்ய வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக அதிகாரசபைக்கு சொந்தமான கணனிகள் மற்றும் கணனி உபகரணங்களிற்கு | அதிகாரசபைக்கு சொந்தமான கணனிகள் மற்றும் கணனி உபகரணங்களிற்கு இடையில் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதாக, குழுவினால் மேற்கொள்ளப்பட்ட | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு |

| | | |
|---|---|---|
| இடையில் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,180 தேறிய பெறுமதியுடைய கணனிகள் மற்றும் கணனி உபகரணங்கள் மாத்திரம் 2022 பெப்ரவரி 28 இல் ரூபா 743,750 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்து கடந்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 486,570. மீள்மதிப்பீட்டு இலாபம் இனங்காணப்பட்டு இருந்ததுடன், அந்த மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் கடந்த ஆண்டி மற்றும் மீளாய்வாண்டிற்காக வருடாந்தம் ரூபா 148,750 தொகை வீதம் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் தொழிற் தகைமையுள்ள மதிப்பீட்டு தொழிலின் அங்கத்தவர் ஒருவர் இல்லாத குழுவொன்றினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளின் சரியான தன்மை தொடர்பாக போன்றே மீள்மதிப்பீடு நடைமுறையாகும் திகதியை இனங்காண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததால் மீள்மதிப்பீட்டு பெறுமதிகளை கடந்த ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்படுத்திய சரியான தன்மை சம்பந்தமாக மற்றும் மீள்மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் கடந்த ஆண்டிற்கு மற்றும் மீளாய்வாண்டிற்குரியதாக மேற்கொண்டிருந்த ரூபா 297,500 ஆன பெறுமானத் தேய்வு செம்மையாக்கும் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை. | மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் அதிகாரசபையினால் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு செம்மையாக்கம் மேற்கொண்டதாக, இம் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் 2021 திசெம்பர் 31 திகதி முதல் நடைமுறையாவதாக, அத் திகதியிலிருந்து நடைமுறையாகும் வகையில் இச் செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அது தொடர்பாக 2021 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லையென, எதரிகாலத்தில் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 2009 செப்டெம்பர் 01 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32,524,756 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கற்புலனாகாத சொத்துகளின் கிரயம் மற்றும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்தி, எதிர்காலத்தில் பேணிச் செல்ல நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய இலக்கம் DMA/2009(2) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளை உள்ளடக்கக் கூடிய வகையில் சரியான நிலையான சொத்துக்களின் பதிவேடு ஒன்று பேணப்பட்டு இருக்காததுடன், அதற்கு பதிலாக சொத்து உருப்படிகளின் எண்ணிக்கையைக் காட்டும் பிரதான பொருட்பதிவேடு மாத்திரமே பேணப்பட்டிருந்தது. | எடுப்பதாக. | |
| (ஆ) | 2015 செப்டம்பர் 25 திகதிய இலக்கம் SP/SB/07/15 கொண்ட ஜனாதிபதி செயலக சுற்றறிக்கை | வெளிநாட்டு உதவி/ கடன் இந்நாட்டிற்கு வழங்கப்படுவது நாட்டின் அபிவிருத்திக்கே அன்றி அதிக செலவுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு அல்ல எனவும், முக்கிய சுய நிகழ்ச்சித் திட்டங்களை குறைந்த கிரயத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமெனவும் மற்றும் அரசினால் வசதிகள் வழங்கியுள்ள நிறுவனங்களை அதற்காக பயன்படுத்த வேண்டுமெனவும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதும் அதற்கு மாற்றமாக 02 நிகழ்ச்சித் திட்டங்களை மற்றும் 02 கூட்டங்களை அதிக கிரயமாக தனியார் ஹொட்டல்கில் நடாத்தியிருந்ததுடன் அதற்காக ரூபா 1,057,385 ஆன தொகையொன்று அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது. | இந் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கூட்டங்களிற்கு உயர் நிலை அதிகாரிகள் பங்குபற்றியதாகவும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களிலிருந்து விலைமனு கோரியுள்ளதாகவும், குறைந்த விலையை வழங்கிய நிறுவனத்தில் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டதாகவும், சில நிகழ்ச்சித் திட்டங்களை விழாவாக நடாத்தியதாகவும், அங்கு மண்டப வசதிகளிற்காக ஒரு நபரிற்கு ரூபா 3,750 செலவாகியுள்ளதாகவும், அது சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமானம் எனவும். | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கூட்டங்களை ஒழுங்கு செய்யும் போது சுற்றறிக்கை பிரகாரம் செலவுகளை முகாமை செய்ய வேண்டும். |
| (இ) | 2021 ஏப்ரல் 09 திகதிய இலக்கம் சீஜீஅய்ஆர்/2021 /02-02 கொண்ட உள்நாட்டு இறைவரி திணைக்களக் கடிதம். | அரச நிறுவனம் மற்ளும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களினால் வழங்குனர்களுக்கு செலுத்திய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான தகவல்களை உரிய படிவம் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் | வழங்குனர்களுக்கு செலுத்திய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான தகவல்களை உரிய படிவம் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி | உள்நாட்டு இறைவரி திணைக்கள ஏற்பாடுகள் பிரகாரம் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் அதன் பிரகாரம் அதிகார சபை மீளாய்வாண்டு முழுவதும் செயற்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு அனுப்ப குறித்துக் கொண்டதாக, 2022 ஆண்டில் செலுத்திய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்ளடங்களாக வழங்குனர்களின் தகவல்களை உடனடியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பவும் நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 6.6 பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய பொதும், அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 22 நாட்கள் தாமதித்து கணக்காய்விற்கு சமர்பித்திருந்தது. | அதிகாரசபையின் 2023 ஆண்டிற்கான புதிய பணிப்பாளர் சபை நியமித்து பணிப்பாளர் சபைக் கூட்டத்தை 2023 மார்ச் 22 திகதி வரை நடாத்த முடியாதிருந்ததால் நிதிக்கூற்றுக்களை சமர்பிக்க தாமதமானதாக. | சுற்றறிக்கை பிரகாரம் தாமதமின்றி நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,043,684 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,523,419 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,567,103 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு அரச மீண்டுவரும் மானியம் மற்றும் வெளிநாட்டு மானியம் முறையே 33 சதவீதத்தால் மற்றும் 74 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1.1 அதிகார சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் இணங்காமைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் அறிக்கை பிரகாரம் நிகழ்கால புகையிலை உற்பத்திக்காக இலங்கையில் காணப்படும் வரிக் கட்டமைப்பு முறையற்றதாக மற்றும் சிக்கலானதாகவும், இது சில வகை வரிகளின் கூட்டுத் தொகையுடன் கூடியதாகவும், 2016 ஆண்டு சிகரட் மீதான மதுவரி வருமானம் அரச மொத்த வருமானத்தின் 7.3 சதவீதமான போதும் அது 2020 ஆண்டளவில் 3.1 சதவீதமாக குறைவடைந்திருந்ததாக | ஜனாதிபதி அவர்களுக்கு 2021 திசெம்பர் 27 திகதி கடிதமொன்றின் மூலம் இவ் வரிச் சமன்பாட்டை நடைமுறைப்படுத்தாதது தொடர்பாக அறிவூட்டப்பட்டுள்ளது. இப் புதிய வரிச் சமன்பாட்டை சட்டமொன்றாக ஆக்கிக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மீண்டும் | புகையிலை புதிய வரிச் சமன்பாட்டை சட்டமொன்றாக ஆக்கிக் கொள்ள துரித நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அதிகார சபையினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் உலக சுகாதார அமைப்பின் நிதி மானியம் மற்றும் உள்நாட்டு நிதியமாக ரூபா 994,148 ஆன செலவை மேற்கொண்டு புகையிலைக்காக புதிய வரிச் சமன்பாடொன்றை அறிமுகப்படுத்தி இருந்ததுடன் இப் புதிய வரிச் சமன்பாட்டை பயன்படுத்தி 2021 ஆண்டில் ரூபா 91.6 பில்லியனாக இருக்கும் சிகரட் மீதான மதுவரி வருமானத்தை 2026 ஆண்டளவில் ரூபா 124.6 பில்லியன் வரை அதிகரிக்க முடியுமெனவும் அது புகையிலை பாவனையை 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைவிற்கு மற்றும் வருடாந்தம் அரச வருமானம் 6 சதவீதமளவால் அதிகரிக்க காரணமாவதாக எதிர்பார்க்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் புகையிலைக்காக புதிய வரிச் சமன்பாட்டை இவ்வறிக்கை திகதியளவிலும் சட்டமொன்றாக ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைப்படுத்த தேவைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீண்டும் முறையாக இவ் வரிச் சமன்பாட்டை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2006 இன் 27 இலக்க புகையிலை மற்றும் *மதுபானம் மீதான* தேசிய அதிகாரசபை சட்டத்தின் 35(2)(இ) பிரிவு பிரகாரம் புகையிலை உற்பத்தி அல்லது மதுசார உற்பத்திகளை பொது மக்களுக்கு விற்பனை செய்ய வைத்துள்ள தளமொன்றினுள் புகையிலை உற்பத்தி மற்றும் மதுசார உற்பத்திகளை அவ்விடத்தில் விற்பனைக்குள்ளதாக நியமித்து இனங்காட்டி மற்றும் அவற்றின் விலைகளை குறிப்பிட்டு சரியான அளவிலான அறிவித்தல் ஒன்றை கட்சிப்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதும், குறித்த பிரிவுற்குரியவாறு கட்டளைகளை தயாரித்து பாறாளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் சட்டத்தின் கீழான அதிகாரங்களை அலுவலர்களுக்கு புகையிலை உற்பத்தி மற்றும் மதுசார உற்பத்திகளை பொது மக்களுக்கு விற்பனை செய்ய வைத்துள்ள இடங்களில் காட்சிப்படுத்தியுள்ள அறிவித்தல்களை ஒழுங்கமைக்க முடியாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | துகர்வோர் அதிகார சபை சட்டம் பிரகாரம் விலை மற்றும் வகை மாத்திரம் குறிப்பிடப்படும் வகையில் ஒழுங்கமைத்து 2022 மே 29 திகதி செயலாளர் சுகாதார அமைச்சிற்கு பிரதியுடன் அமைச்சரிற்கு விழித்துள்ளதாக, அக் கடிதத்திற்காக பதில் கிடைக்காததால் 2022 திசெம்பர் 27 திகதி நினைவூட்ட கடிதமொன்றும் சுகாதார அமைச்சதின் செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக, உருவப்பட எச்சரிக்கை வகைப்படுத்த வேண்டுமென 2015 இன் 03 இலக்க சட்டத்தால் திருத்திய 2006 இன் 27 ஆம் இலக்க கொண்ட புகையிலை மற்றும் *மதுபானம் மீதான* தேசிய அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையென, அங்கு உருவப்பட | புகையிலை உற்பத்தி அல்லது மதுசார உற்பத்திகளை பொது மக்களுக்கு விற்பனை செய்ய வைத்துள்ள இடங்களில் அறிவித்தல்களை ஒழுங்குபடுத்தலை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சுகாதார எச்சரிக்கை பரிந்துரைத்தல் மற்றும் அதற்குரிய சீடீ தட்டுக்களை விநியோகிப்பது அதிகார சபையிக்குரிய பணியாவதாக. | |
| (இ) 2012 ஆகஸ்ட் 08 திகதிய இலக்கம் 1770/15 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் 10 பந்தி பிரகாரம் மற்றும் 2015 இன் 03 இலக்க புகையிலை மற்றும் *மதுபானம் மீதான* தேசிய அதிகார சட்டத்தின் மூலம் திருத்திய 2006 இன் 27 இலக்க புகையிலை மற்றும் *மதுபானம் மீதான* தேசிய அதிகாரசபை சட்டத்தின் 34(அ)(5) பிரிவு பிரகாரம் சிகரட் மற்றும் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு சுகாதார எச்சரிக்கையை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றி சிகரட் பெட்டி, பொதியில் அல்லது காட்போட் பெட்டியின் மீது காட்சிப்படுத்த குடியுமான வகையில் மேல் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்ட 08 சுகாதார எச்சரிக்கைகளின் தொகுதியை விரிவாக்க 2022 ஆண்டில் 10 சுகாதார எச்சரிக்கைகளை இனங்கண்டிருந்த போதும் அவற்றை வகைப்படுத்தி இருக்கவில்லை. அவ்வாறே இவ் அறிக்கையின் திகதி வரையும் அந்த புதிய சுகாதார எச்சரிக்கைகளை அரச வர்த்தமானியில் பிரசுறித்திருக்கவில்லை. அதன் காரணமாக 2015 ஆண்டு முதல் இவ் அறிக்கை திகதி வரையான 08 ஆண்டுகளான காலத்தினுள் 08 சுகாதார எச்சரிக்கைகளின் தொகுதி மாத்திரம் பயன்படுத்தப்பட்டதில் சுகாதார எச்சரிக்கை மாற்றுவது தொடர்பில் செயற்திறனை உச்சப்படுத்திக் கொள்ள அதிகாரசபைக்கு இயலாதிருந்தது. | - மேற்படி - | சுகாதார எச்சரிக்கையை மாற்றுவதன் செயற்திறனை உச்சப்படுத்திக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் பொது முகாமையாளர் பதவிக்காக 2021 ஆண்டு மே மாதம் ஆட்சேர்த்திருந்த விண்ணப்பதாரியினால் (பெண் உத்தியோகத்தர்) | முகாமைத்துவ தரம் என நேர்முகப் பரீட்சை சபை தெளிவுபடுத்திக் கொண்டது அவர் முன்னர் | அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 4.1 பந்தியின் கீழான தேவையான குறைந்தபட்ச தகைமையை பூர்த்தி செய்திருகாத நிலையில் பொது முகாமையாளர் பதவிக்கு நியமித்து 2022 ஜுன் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,991,574 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பொது முகாமையாளர் பதவிக்குரிய விடயப் பரப்பில் கடமை மேற்கொள்ளும் போது மேல் உத்தியோகத்தரின் வினைத்திறமையின்மை காரணமாக அவரின் சேவை 2022 ஜுலை மாதம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அதிகார சபை ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் தேவையான குறைந்த பட்ச தகைமையை பூர்த்தி செய்திருக்காத விண்ணப்பதாரரை பொது முகாமையாளர் பதவிக்கு நியமித்ததில் இப் பதவிக்கு எதிர்பார்தவாறு வினைத்திறனை அடைந்து கொள்ள அதிகார சபைக்கு இயலாதிருந்தமை காரணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,991,574 ஆன செலவு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. | கடமையாற்றிய தேசிய நீரியல்வன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட சம்பள அளவு பற்றி கவனத்திற் கொண்டாகுமென, நேர்முகப் பரீட்சை சபைக்கு அவரால் சமர்பித்த கடிதமொன்றின் மூலம் 1993 ஆண்டு முதல் அவர் ஆராய்ச்சி உதவியாளர் பதவியை அந் நிறுவனத்தில் வகித்துள்ளதாக நேர்முகப் பரீட்சை சபைக்கு உறுதியானதுடன் நாறா நிறுவனத்தின் சேவையாற்றிய 28 வருட காலத்தில் 13 வருடங்களிற்கு ‘‘குறித்த மேலதிக அனுபவம்’’ மொத்த புள்ளி அளவை இங்கு நேர்முகப் பரீட்சை சபையினால் அவரிற்கு வழங்கியதாக, நேர்முக பரீட்சை சபையினால் அவரை அப்பதவியிற்கு தெரிவு செய்வதாக பரிந்துரைத்து குறிப்பொன்றை புள்ளிக் குறிப்பு பத்திரத்தில் இடாமை தாமதத் தவறொன்றாவதாக. | தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை நடாத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டகளில் ரூபா 1,307,282 ஆன செலவை மேற்கொண்டு மூன்று சந்தர்ப்பங்களில் உளவள ஆலோசனை பாடநெறியை நடாத்தி 108 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியிருந்ததுடன் அவற்றின் 83 அலுவலர்கள் சுய அடிப்படையில் சம்பளம் அல்லது படிகள் கொடுப்பனவு செய்யாது அலுவலக நேரத்தின் பின்னர் மேற் குறிப்பிட்ட உளவள ஆலோசனை சேவையில் ஈடுபட சந்ர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆண்டினுள் ஆலோசனை வழங்கியிருந்த மொத்த அழைப்பு எண்ணிக்கை 3,666 ஆனதுடன் | பணிப்பாளர் சபை பரிந்துரை பிரகாரம் சுயவிருப்பு அடிப்படையில் உளவள ஆலோசனை வழங்கும் அலுவலர்களின் செயலமர்பு பட்டியலை தவிசாளரின் அங்கீகாரத்தின் மீது தொகுதிக்கு உட்படுத்துவதாக, இந்த அலுவலர்கள் உளவன ஆலோசனை சேவையை வழங்கும் போது பிரச்சினைகுரிய அல்லது சிக்கலான சந்தர்ப்பமொன்று | சுயவிருப்ப உளவள ஆலோசனை சேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும் ஆலோசனை தொடர்பான அதிகார சபையின் மேற்பார்வையை பலப்படுத்த வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றில் 2,085 அழைப்புகள் சுயசேவை உளவள ஆலோசனை அலுவலர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 143 நாட்களில் மேற்கொண்ட உளவள ஆலோசனை எண்ணிக்கை தொடர்பாக அந்த சுயசேவை அலுவலர்களினால் அதிகார சபைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. அவ்வாறே சுயசேவை அலுவலர்களினால் ஆலோசனை வழங்கிய அழைப்பு எண்ணிக்கையை மாத்திரம் அறிக்கையிடுவதுடன் அவர்களினால் வழங்கியிருந்த ஆலோசனை சேவையின் தரம் பற்றி பதிப்பீடொன்றை அதிகார சபையினால் மேற்கொண்டதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் சுய உளவள ஆலோசனை சேவை அலுவலர்களினால் மேற்கொண்டிருந்த ஆலோசனைகள் தொடர்பான அதிகார சபையின் மேற்பார்வை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | இருப்பின் எமக்கு அறிவிப்பதாக, சுயவிருப்புடன் உளவள ஆலோசனை வழங்கும் அலுவலர்களின் உளவள ஆலோசனை வழங்குவது தொடர்பாக மீளாய்வுக் கூட்டமொன்றும் 2022 நவம்பர் 05 திகதி நடாத்தி அனுபவம் மற்றும் உளவள ஆலோசனை வழங்குவது தொடர்பாக மேலும் கலந்துரையாடியதாக, 1948 உளவள ஆலோசனை சேவையின் தரத்தை உயர்த்த ஆலோசனை சேவை நிலையை பகுப்பாய்வு செய்து சுயவிருப்ப ஊழயர்களினால் வழங்கப்படும் சேவையை ஒழுங்கமைக்க பொருத்தமான முறைமையொன்றை உலக சுகாதார அமைப்பின் அல்லது அரச ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ள குறித்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | |
| (ஆ) | 2019 ஏப்ரல் 22 இன் 09/2019 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு மாற்றமாக 2019 ஜுலை மாதம் முதல் 2021 திசெம்பர் மாதம் வரை அதிகார சபையின் 13 அலுவலர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 690,648 ஆன இடைக்கால படிகள் மற்றும் 2021 ஜுன் 15 இன் 21/Misc (032) இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரின் 2021 ஜுன் 16 இன் MIN/add/See/Admin/16/21 இலக்க கடிதத்திற்கு மாற்றமாக 2021 ஜுன் மாதம் முதல் 2021 ஆகஸ்ட் மாதம் வரை அதிகார சபையின் ஆளணியில் 12 பேர்களுக்கு செலுத்திய ரூபா 262,375 ஆன விஷேட படிகளை இவ்வறிக்கை திகதி வரையும் குறித்த அலுலர்களிடமிருந்து அல்லது அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து மீள் அறவிட்டிருக்கவில்லை. | செலுத்திய விஷேட படிகளிற்காக சுகாதார செயலாளரின் தழுவு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக, 2019 ஏப்ரல் 22 இன் 09/2019 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் செலுத்திய படிகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்திய இடைக்கால படிகள் மற்றும் விஷேட படிகளை பெறுனர்களிடமிருந்து அல்லது பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 4.4 பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரசபையிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்படவில்லை என, சுகாதார அமைச்சினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதாக, அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஆளணியின் குறைபாடு காரணமாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டில்லை என. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |